

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ”உடன்பிறப்பே வா’ என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் தயாரிக்கப்பட்ட ”அன்றும் ! இன்றும்! என்றும்! சிறுபான்மையின மக்களின் காப்பான் தி.மு.க.” என்ற புத்தகத்தினை வெளியிட்டார். உடன் கழகத்தின் பொதுச்செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் மைதீன்கான், செயலாளர் சுபேர் கான் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்கத்தின் மாநிலத் தலைவர் ரவீந்திரன் கெங்குசாமி நாயுடு, மாநில செயல் தலைவர் வி. மோகன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கோவை – அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி. நாயுடு அவர்களின் பெயர் சூட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உள்ளனர்.

### கோவை - அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி.நாயுடு பெயர்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்கம் நன்றி!

## மாநில செயல் தலைவர் வி.மோகன் தலைமையில் நிர்வாகிகள் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, நவ. 5 -

கோவை - அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி.நாயுடு பெயர் சூட்டியதையடுத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்க மாநிலச் செயல் தலைவர் வி.மோகன் தலைமையில் நிர்வாகிகள் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.11.2025) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்க மாநில நிர்வாகிகள், மாநில செயல் தலைவர் வி.மோகன் தலைமையில் நேரில் சந்தித்து, கோவை - அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி. நாயுடு பெயர் சூட்டியதற்கு நன்றி தெரிவித்தனர்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆகியோர் உடனிருந்தனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்!

# வாக்குச் சாவடி பாக முகவர்கள்-பூத் டிஜிட்டல் ஏஜென்ட் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!



கன்னியாகுமரி, நவ. 5 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

“என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி” எனும் கழகத் தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் மு.க. ஸ்டாலின் அவர்களின் முழக்கத்தின்படி, 2026 - சட்டமன்ற தேர்தலில் “வெல்வோம் 200, படைப்போம் வரலாறு” எனும் வெற்றிப் பயணத்தை தொடரும் வகையில், கழக துணை பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்ற குழு தலைவரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலின்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2) மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆலோசனைக் கூட்டம் நாளை (06.11.2025 - வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு நாகர்கோவில், இருளப்பபுரம், சீதாலெட்சுமி திருமண மண்டபத்தில் வைத்து நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கும், காலை 11.00 மணிக்கு சுசீந்திரம், செல்வம் திருமண மண்டபத்தில் வைத்து கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கும், மதியம் 2.00 மணிக்கு குளச்சல், சாஸ்தான்கரை, P.M.M. ஆடிட்டோரியத்தில் குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கும் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டங்களில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் திரு. கே.எஸ். ரவிச்சந்திரன், சட்டத் துறை துணை செயலாளர் திரு. எஸ். ராஜாமுகமது, தலைமை கழக வழக்கறிஞர் எஸ்.எஸ். மனோஜ் ஆகியோர் பங்கேற்று சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR) குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்ற னர்.

ஆகவே, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல் ஆகிய சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், வட்ட, கிளை கழக செயலாளர்கள், அனைத்து வாக்குச்சாவடிகளின் BLA2, BDA மற்றும் கழக வழக்கறிஞர்கள், DLC, CLC, ULC, TLC உள்ளிட்ட அனைவரும் இந்த சிறப்பு வாக்காளர் திருத்தம் தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி குறித்து

2. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) குறித்து

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





